
# 30வது தவக்கால
# திருயாத்திரை



## பனிமய மாதா சங்கம்

### புனித பிலிப்நேரிஸ் தேவாலயம்

புறக்கோட்டை கொழும்பு—11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிமய மாதா சங்கம்

## பிலிப்நேரிஸ் தேவாலயம்

## ஓல்கொட் மாவத்தை

## கொழும்பு – 11

# தவக்கால திருயாத்திரை

நேரம்: காலை 9.00 மணி

இடம் : தேவத்தை

திகதி : 08.03.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறையுரை : அருட்பணி ஹாரிஸ் ஆரோக்கியராஜ்
(கார்மேல் சபை)

திருமணி ஆராதனை : அருட்பணி ஜோர் மரியரட்ணம் (CFM)

சிலுவைப் பாதையின் போது பின்வரும் ஆலய பங்கைச் சேர்ந்தவர்கள் அந்தந்த நிலைகளில் பொறுப்பேற்பதோடு சிந்தனைக்கு முன் பின் வரும் ஜெபங்களிலும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பனிமய மாதா சங்க உறுப்பினர்கள்**

1, 2 } கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயம்

3, 4 } கொச்சிக்கடை புனித வியாகுலமாதா ஆலயம்

5, 6 } மோதர / மட்டக்குழியைச் சேர்ந்த ஆலயங்கள்

7 } கிறேண்ட்பாஸ் புனித சூசையப்பர் ஆலயம்

8 } கொம்பனித்தெரு ஜெபமாலை மாதா ஆலயம்

9, 10 } செக்கடித்தெரு புனித அன்னம்மாள் ஆலயம்

11 } புதுக்கடை புனித செபஸ்தியார் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பாடுகளின் பவனி
### ஆரம்ப பாடல்

**ஓ பரிசுத்த ஆவியே**

ஓ பரிசுத்த ஆவியே
என் ஆன்மாவின் ஆன்மாவே
உம்மை ஆராதனை செய்கிறேன் – 2
இறைவா ஆராதனை செய்கிறேன்

என்னை ஒளிரச்செய்து வழிகாட்டும்
புது வழுவூட்டி என்னை தேற்றும்
என் கடமை என்னவென்று காட்டும்
அதைக் கருத்தாய் புரிந்திட தூண்டும்
என்ன நேர்ந்தாலும் நன்றி துதிக்கூறி

பணிவேன் என் இறைவா
உந்தன் திருவுளப்படி என்னை நடத்தும்

### ஊர்வலப்பாடல்கள்

**முதலாம் திருநிலையை நோக்கி.......**

எங்கே சுமந்து போறீர் சிலுவையை நீர்
எங்கே சுமந்து போறீர் பொங்கும் பகைவராலே
அங்கம் நடுநடுங்க எங்கே போறீர்

**பாடுகளின் பாதையிலே**

பாடுகளின் பாதையிலே
தேவமகன் ஊர்வலமோ
பாவங்களின் பாரமெல்லாம்
திருச்சிலுவை வடிவல்லவோ

மக்களுக்காய் இரங்கி நின்றார்
மக்கள் மனம் இரங்கவில்லை
பக்கமெல்லாம் பறந்ததம்மா
பார்த்த கண்கள் சிவந்ததம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிதாங்கும் சிரசினிலே முள்தாங்கும்
நிலையல்லவா அணைத்திருக்கும் கரங்களுக்கு
பிணைத்திருக்கும் முடிவல்லவா

வாழவைக்க வந்த உள்ளம் வாடி நிற்கும் நிலை இங்கு
தேடி வந்த திருமகனை சாடி நிற்கும் மனங்கள் இங்கு
அன்பு செய்ய வந்த நெஞ்சம் துன்பம் பெறும் கொடுமையிது
எம் இறைவா இறைஞ்சுகின்றோம் ஏழைகளின் பாவம்
பொறும்

**1ஆம் திருநிலை**
**இயேசு மரணத்திற்கு தீர்வையிடப்படுகின்றார்**

முதல்வர் :– திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து
வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம்
பண்ணுகிறோம்

மற்றவர் :– அது ஏனென்றால் உம்முடைய அர்ச்சிஷ்ட
சிலுவையைக் கொண்டு உலகத்தை
மீட்டு இரட்சித்தீர்

**சிந்தனை....**

பரமண்டல மந்திரம், அருள்நிறை மந்திரம்,திரித்துவ
ஸ்தோத்திரம்

முதல்வர் :– எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி

மற்றவர் :– எங்கள் பேரில் தயவாயிரும்

எல்லோரும்:– மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள்
சர்வேசுரனுடைய இரக்கத்தினால்
சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரண்டாம் திருநிலையை நோக்கி.......**

மனித பாவத்தாலே மரணத் தீர்வைப் பெற்று
தூய செம்மறி போலே துக்கத்துடன் வருந்தி
எங்கே போறீர்

**இயேசுவின் பின்னால் நானும் செல்வேன்**

இயேசுவின் பின்னால் நானும் செல்வேன்
திரும்பிப் பார்க்க மாட்டேன் – 2
சிலுவையே முன்னால் உலகமே பின்னால்
இயேசு சிந்திய குருதியினாலே விடுதலை அடைந்தேனே

அச்சமும் இல்லை அதிர்ச்சியும் இல்லை
அடியேன் உள்ளத்திலே
ஆண்டவன் இயேசு அடைக்கலப்பாறை
ஆதலின் குறையில்லை
ஆண்டவர் முன்னால் அகிலமே பின்னால்
அன்பர் இயேசுவின் வார்த்தையினாலே
விடுதலை அடைந்தேனே

தாயும் அவரே தந்தையும் அவரே
தரணியர் நமக்கெல்லாம்
சேயர்கள் நம்மை செவ்வழி நடத்தும்
தெய்வம் அவரன்றோ
ஆயனே முன்னால் அலகையே பின்னால்
அன்பர் இயேசுவின் அன்பு மொழியிலே
ஆறுதல் அடைந்தேனே

**2ஆம் திருநிலை**
**இயேசுவின் மீது சிலுவை சுமத்தப்படுகிறது**

முதல்வர் :– திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து
வணங்கி உமக்கு நன்றியறிந்த
ஸ்தோத்திரம் பண்ணுகிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர் :— அது ஏனென்றால் உம்முடைய அர்ச்சிஷ்ட
சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு
இரட்சித்தீர்

சிந்தனை....

பரமண்டல மந்திரம், அருள்நிறை மந்திரம்,திரித்துவ
ஸ்தோத்திரம்

முதல்வர் :— எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி

மற்றவர் :— எங்கள் பேரில் தயவாயிரும்

எல்லோரும்:— மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள்
சர்வேசுரனுடைய இரக்கத்தினால்
சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.

மூன்றாம் திருநிலையை நோக்கி.....

பாரச்சிலுவையை நீர் பாசத்துடன் அணைத்து பாவத்தின்
சுமை தாங்கி ஆர்வத்துடன் நடந்து எங்கே போறீர்

எதை நான் தருவேன் இறைவா
உம் இதயத்தின் அன்புக்கீடாக
எதை நான் தருவேன் இறைவா

குறை நான் செய்தேன் இறைவா
பாவக் குழியில் விழுந்தேன் இறைவா
கறையாம் பாவத்தை நீக்கிடவே — நீ
கல்வாரி மலையில் இறந்தாயோ

பாவம் என்றொரு விஷத்தால் நான்
பாதகம் செய்தேன் இறைவா
தேவனே உம் திருப்பாடுகளால்
எனைத் தேற்றிடவே நீ இறந்தாயோ

அகிலமே அறிவால் அளந்தேன்
உன் அன்பையும் அறிந்து மறந்தேன்
மகிமை நிறைந்த எம் இறைவா
நீ மனிதன் எனக்காய் இறந்தாயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3ஆம் திருநிலை
இயேசு முதன்முறையாக கீழே விழுகிறார்

முதல்வர் :– திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து
வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம்
பண்ணுகிறோம்

மற்றவர் :– அது ஏனென்றால் உம்முடைய அர்ச்சிஷ்ட
சிலுவையைக் கொண்டு உலகத்தை
மீட்டு இரட்சித்தீர்

சிந்தனை....

பரமண்டல மந்திரம், அருள்நிறை மந்திரம்,திரித்துவ
ஸ்தோத்திரம்

முதல்வர் :– எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி

மற்றவர் :– எங்கள் பேரில் தயவாயிரும்

எல்லோரும்:– மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள்
சர்வேசுரனுடைய இரக்கத்தினால்
சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.

நான்காம் திருநிலையை நோக்கி

கல்வாரி மலை நாடி தள்ளாடி தரை வீழ்ந்து எல்லோரின்
பாவங்களை தனிமையாய் சுமந்து எங்கே போறீர

சுமை சுமந்து

சுமை சுமந்து சோர்ந்திருப்போரே – வாருங்கள்
நம் ஆண்டவர் அழைக்கின்றார்
இளைப்பாற்றி கொடுக்கின்றார்

இருகரம் விரித்தவராய் இதயத்தைத் திறந்தவராய்
இறைவன் இருக்கின்றார் இனியும் தாமதமேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசியால் வாடுவோரே பரமனைத் தேடிடுவீர்
மன்னா பொழிந்த அவர் எம்மையும் வாழவைப்பார்

அல்லல் படுவோரே ஆறுதல் வேண்டுமென்றால்
ஆண்டவன் பாதம் தன்னில் அமர்ந்து அழுதிடுங்கள்

**நான் பாவி இயேசுவே...**

நான் பாவி இயேசுவே – என்
வாழ்வை மாற்றுமே

வீழ்ந்துவிட்டேன் மீண்டும் தவறிவிட்டேன்
என்னைத் தூக்கும் இயேசுவே

நாடுகின்றேன் உம்மைத் தேடுகின்றேன்
எந்தன் தாகம் தீருமே

சோர்ந்துவிட்டேன் மனம் உடைந்துவிட்டேன்
என்னைத் தேற்றும் இயேசுவே

**4ஆம் திருநிலை**
**இயேசு தன் தாயை சந்திக்கிறார்**

முதல்வர் :– திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் பண்ணுகிறோம்

மற்றவர் :– அது ஏனென்றால் உம்முடைய அர்ச்சிஷ்ட சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

சிந்தனை....

பரமண்டல மந்திரம், அருள்நிறை மந்திரம்,திரித்துவ ஸ்தோத்திரம்

முதல்வர் :– எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி

மற்றவர் :– எங்கள் பேரில் தயவாயிரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும்:— மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள்
சர்வேசுரனுடைய இரக்கத்தினால்
சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.

**ஐந்தாம் திருநிலையை நோக்கி....**

**மாமரி கன்னி அன்னை மகனின் கோலம் கண்டு**
**மாதுயருடன் வாடி மனம் நொந்து வருந்த எங்கே போறீர**

**வியாகுல மாமரியே தியாகத்தின் மாதாவே...**

வியாகுல மாமரியே தியாகத்தின் மாதாவே
சிலுவை அடியினிலே சிந்தை நொந்தழுதாயோ

பன்னிரு வயதினில் ஆலயத்தில் — அன்று
அறிஞர்கள் புகழ்தவரை
கரங்களை விரித்தே கள்வனைப் போல்
கழு மரத்தினில் கண்டதினால்

திருமணப் பந்தியில் கனிரசமே — அன்று
அருளிய திருமகனை
குருதி சிந்தி கடற்காடியினை — இன்று
பருகிடக் கண்டதினால்

கண்ணீரை சிந்திய மனிதருக்கு — அருள்
பண்ணிய திருமகனை
மண்ணவர்க்காகத் தன்னுயிரை இன்று
மாய்த்திடக் கண்டதினால்

**5ஆம் திருநிலை**
**சீரோனே ஊரானாகிய சீமோன்**
**இயேசு சிலுவையை சுமக்க**
**உதவுகிறான்**

முதல்வர் :— திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து
வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம்
பண்ணுகிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர் :- அது ஏனென்றால் உம்முடைய அர்ச்சிஷ்ட
சிலுவையைக் கொண்டு உலகத்தை
மீட்டு இரட்சித்தீர்

**சிந்தனை....**

பரமண்டல மந்திரம், அருள்நிறை மந்திரம்,திரித்துவ ஸ்தோத்திரம்

முதல்வர் :- எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி

மற்றவர் :- எங்கள் பேரில் தயவாயிரும்

எல்லோரும்:- மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள்
சர்வேசுரனுடைய இரக்கத்தினால்
சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.

**ஆறாம் திருநிலையை நோக்கி....**

**உதிரமாறாய்ச் சிந்தி உள்ளவீரமிழந்து**
**சீரோன் சீமோன் துணையை ஏற்று வழிநடந்து**
**எங்கே போறீர**

**திருப்பாதம் நம்பி வந்தேன் கிருபைநிறை...**

திருப்பாதம் நம்பி வந்தேன் கிருபைநிறை இயேசுவே
உமதன்பைக் கண்டடைந்தேன் தேவ சமூகத்திலே

இளைப்பாறுதல் தரும் தேவா களைத்தோரைத் தேற்றிடுமே
சிலுவை நிழல் எந்தன் தஞ்சம்
சுகமாய் அங்கு தங்கிடுவேன்

என்னைநோக்கி கூப்பிடு என்றீர் இன்னல் துன்பநேரத்திலும்
கருத்தாய் விசாரித்து என்றும்
கனிவோடென்னை நோக்கிடுமே

உம்மை ஊக்கமாய் நோக்கி பார்த்தே
உண்மையாய் வெட்கம் அடையேன்
உமது முகப்பிரகாசம்
தினமும் என்னில் வீசிடுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம்மாற மாந்தன் நீரல்ல மனவேண்டுதல் நீர் கேட்டிடும்
எனதுள்ளம் ஊன்றி ஜெபித்தே
இயேசுவே உம்மை அண்டிடுவேன்

**6ஆம் திருநிலை**
**வெரோணிக்காள் என்னும் பெண்மணி**
**இயேசுவின் முகத்தை துடைக்கிறாள்**

முதல்வர் :– திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து
வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம்
பண்ணுகிறோம்

மற்றவர் :– அது ஏனென்றால் உம்முடைய அர்ச்சிஷ்ட
சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு
இரட்சித்தீர்

**சிந்தனை....**

பரமண்டல மந்திரம், அருள்நிறை மந்திரம், திரித்துவ
ஸ்தோத்திரம்

முதல்வர் :– எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி

மற்றவர் :– எங்கள் பேரில் தயவாயிரும்

எல்லோரும்:– மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள்
சர்வேசுரனுடைய இரக்கத்தினால்
சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.

**ஏழாம் திருநிலையை நோக்கி**

**கர்த்தனே உம் வதனம் இரத்தக்கறையால் மங்கி**
**உத்தமி வெரோணிக்காள் வெண்துயிலால் துடைக்க**
**எங்கே போறீர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகின்றார் போகின்றார்

போகின்றார் போகின்றார்
சிலுவை சுமந்து போகின்றார் போகின்றார் – 2
போகின்றார் போகின்றார் (போகின்றார்)

1. தூயவன் கால்களில் வலுவுமில்லை – 2
மாயவன் விழிகளில் ஒளியுமில்லை – 2
நாயகன் வதனத்தில் களையுமில்லை – 2
தேவன் உடலில் உறுதியில்லை (போகின்றார்)

2. சிரசில் முள்முடி மணிமுடியோ – 2
தோளில் சிலுவை அணிகலனோ – 2
கல்லும் முள்ளும் கம்பளமோ – 2
ஆளும் கயவர் காவலரோ (போகின்றார்)

3. மன்னர் இயேசு போகின்றார்
சிலுவை ஏந்திப் போகின்றார்
மருளில் மாய்ந்த மானிடரே – 2
அருளைப் பொழியப் போகின்றார் (போகின்றார்)

**7ஆம் திருநிலை**
**இயேசு இரண்டாம் முறை தரையில் விழுகிறார்**

முதல்வர் :– திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் பண்ணுகிறோம்

மற்றவர் :– அது ஏனென்றால் உம்முடைய அர்ச்சிஷ்ட சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

சிந்தனை....

பரமண்டல மந்திரம், அருள்நிறை மந்திரம்,திரித்துவ ஸ்தோத்திரம்

முதல்வர் :– எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி

மற்றவர் :– எங்கள் பேரில் தயவாயிரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும்:– மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள்
சர்வேசுரனுடைய இரக்கத்தினால்
சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.

எட்டாம் திருநிலையை நோக்கி.........

பாவங்கள் ஒன்றாய் சேர்ந்த பாரச்சுமையினாலே
மீண்டும் தரையில் வீழ்ந்து வீரத்துடன் எழுந்து
எங்கே போறீர்

என் வாழ்வில் இயேசுவே எந்நாளும்

என் வாழ்வில் இயேசுவே எந்நாளும் இங்கே
எல்லாமும் நீயாக வேண்டும் – எந்தன்
எல்லாமும் நீயாக வேண்டும்
சோகங்கள் ஆறாமல் நான் வாடும்போது
தாயாக நீ மாற வேண்டும் – அன்புத்
தாயாக நீ மாற வேண்டும்

பாரங்கள் தாங்காமல் சாய்கின்றபோது
பாதங்கள் நீயாக வேண்டும் – எந்தன்
பாதங்கள் நீயாக வேண்டும்
பாவங்கள் கடலாகி நான் மூழ்கும் போது
ஓடங்கள் நீயாக வேண்டும் – வரும்
ஓடங்கள் நீயாக வேண்டும்

போராட்டம் சூழ்ந்தென்னை தீவாக்கும் போது
பாலங்கள் நீயாக வேண்டும் – இணைப்
பாலங்கள் நீயாக வேண்டும்
தீராத ஆர்வத்தில் நான் தேடிப் பயிலும்
பாடங்கள் நீயாக வேண்டும் – மறைப்
பாடங்கள் நீயாக வேண்டும்

உன்திரு யாழில்

உன்திரு யாழில் என் இறைவா –பல
பண்தரும் நரம்புண்டு
என்னையும் ஓர் சிறு நரம்பெனவே – அதில்
இணைத்திட வேண்டும் இறையரசே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழினை நீயும் மீட்டுகையில் – இந்த
ஏழையின் இதயம் துயில்கலையும் – 2
யாழிசை கேட்டு தன்னை மறந்து – உந்தன்
ஏழிசையோடு இணைந்திடுமே இணைந்திடுமே

விண்ணகச் சோலையில் மலரெனவே – திகழ்
எண்ணில்லாத் தாரகை உனக்குண்டு
உன்னருட் பேரொளி நடுவினிலே – நான்
என் சிறு விளக்கையும் ஏற்றிடுவேன் ஏற்றிடுவேன்

**8ஆம் திருநிலை**
**ஜெருசலேம் நகர் பெண்மணிகளுக்கு**
**இயேசு ஆறுதல் கூறுகிறார்**

முதல்வர் :– திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் பண்ணுகிறோம்

மற்றவர் :– அது ஏனென்றால் உம்முடைய அர்ச்சிஷ்ட சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

**சிந்தனை....**

பரமண்டல மந்திரம், அருள்நிறை மந்திரம், திரித்துவ ஸ்தோத்திரம்

முதல்வர் :– எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி

மற்றவர் :– எங்கள் பேரில் தயவாயிரும்

எல்லோரும்:– மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.

**ஒன்பதாம் திருநிலையைநோக்கி.....**

புண்ணிய பெண்மணிகள் புலம்பி அழும்வேளை
தேற்றுதல் கூறி நீரும் நேசக்கண்ணீர் சொரிந்து
எங்கே போறீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகோர் உன்னை

உலகோர் உன்னை பகைத்தாலும்
உண்மையாய் அன்பு கூறுவாயா?
உற்றார் உன்னை வெறுத்தாலும்
உந்தன் சிலுவையை சுமப்பாயா – 2

உனக்காக நான் மரித்தேனே
எனக்காக நீ என்ன செய்தாய் – 2
உலக மேன்மை அற்பமென்றும்
உலக ஆஸ்தி குப்பை என்றும்
உள்ளத்தில் நின்று கூறுவாயா?
ஊழியம் செய்ய வருவாயா?

மேய்ப்பன் இல்லாத ஆடுகள் போல்
மேதினி எங்கும் புல்வெளியில்
மேய்ப்பன் இயேசுவை அறிந்த நீயும்
மேன்மையை நாடி ஓடவாயா?

**9ஆம் திருநிலை**
**இயேசு மூன்றாம்முறை தரையில் வீழ்கிறார்**

முதல்வர் :– திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் பண்ணுகிறோம்

மற்றவர் :– அது ஏனென்றால் உம்முடைய அர்ச்சிஷ்ட சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

சிந்தனை....

பரமண்டல மந்திரம், அருள்நிறை மந்திரம்,திரித்துவ ஸ்தோத்திரம்

முதல்வர் :– எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி

மற்றவர் :– எங்கள் பேரில் தயவாயிரும்

எல்லோரும்:– மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பத்தாம் திருநிலையை நோக்கி.....**

தூர வழி சிலுவை தாங்க பெலமுமின்றி
மூன்றாம்முறை தரையில் முகம்படிந்தெழுந்து
எங்கே போறீர்

**யாருக்கு நிம்மதி வேண்டும்**

யாருக்கு நிம்மதி வேண்டும்
யார் துயர் தீர்த்திட வேண்டும்
இறைவனில் நம்பிக்கை வேண்டும்
இருந்தால் உனைவந்து சேரும் வந்து சேரும் – 2
மனமே அறிவாய் – 2
யாருக்கு நிம்மதி வேண்டும்

இறைவனின் வார்த்தை உயிருள்ளது
என்ன நிகழ்ந்தாலும் உன்னை வாழ்விப்பது
கடலை இரண்டெனப் பிரித்ததன்று
மலைக் குன்றினை நடந்திடச் செய்வது
கடும்புயல் காற்று என்றாலும்
கலைத்துவிடும் இறைவார்த்தை
இறை வார்த்தையை நம்பி வாழ்ந்துவிடு

கல்லறை இருந்த மனிதனையும்
ஒரு சொல்லால் உயிருடன் அழைத்ததன்று
தொல்லையுறும் பல நோயருக்கு
இறை சொல்லே நலமே ஊட்டியது
உடலில் உயிர் பிரிந்தாலும்
உடனே அது வந்து சேரும்
இறை வார்த்தையை நம்பி வாழ்ந்துவிடு

**கருணைத் தெய்வமே கண்பாரும்...**

கருணைத் தெய்வமே கண்பாரும் – எங்கள்
பாவங்களை நீர் பொறுத்தருளும்

உடலும் அறிவும் மனமும் – ஒன்று
சேர்ந்து உம்மை எதிர்த்ததையா
தேவ கட்டளை வழியை – மனம்
பன்முறை அறிந்தே வெறுத்ததையா
பாவச் சேற்றை நாளும் – எம்
வாழ்வே கொண்டு நிறைந்ததையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதை தெளிவுறத் தெரிந்தும் – அதைப்
பார்த்து நாங்கள் நடக்கவில்லை
உண்மை விளக்கு எரிந்தும் – அதன்
ஒளியின் அருகே வாழவில்லை
இறைவன் அன்பு அழைத்தும் – அதை
உணர்ந்த பின்னும் திருந்தவில்லை

அன்பு செய்யும் இறைவா – உனை
மறந்து சென்றதை எண்ணுகின்றோம்
நீதி நிறையும் தலைவா – எம்
பாவம் நினைத்தே கலங்குகின்றோம்
தூய வாழ்வின் நிறைவே – உன்
மன்னிப்புத் தருவாய் உயிர் பெறுவோம்

**10ஆம் திருநிலை**
**இயேசுவின் ஆடைகள் களையப்படுகின்றன**

முதல்வர் :– திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் பண்ணுகிறோம்

மற்றவர் :– அது ஏனென்றால் உம்முடைய அர்ச்சிஷ்ட சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

சிந்தனை....

பரமண்டல மந்திரம், அருள்நிறை மந்திரம்,திரித்துவ ஸ்தோத்திரம்

முதல்வர் :– எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி

மற்றவர் :– எங்கள் பேரில் தயவாயிரும்

எல்லோரும்:– மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.

பதினோராம் திருநிலையை நோக்கி.....

**நீட்டாடைக் கழற்றவே கோடிக்காயங்களாலே**
**இரத்தம் ஆறாய்ப்பெருக வேதனையால் வருந்தி**
**தூயா நின்றீர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பயன் படுத்தும் இறைவா**

பயன் படுத்தும் இறைவா
பதரான என்னை பயனுள்ள கருவியாய்
பயன் படுத்தும் இறைவா

எனது கரங்கள் உம்பணி புரிய
எனது கால்கள் உம்வழி செல்ல – 2
எனது கண்கள் உம்மைப்போல் பார்க்க – 2
எனது நாவும் உம்புகழ் பாட

எனது செவிகள் உம்மொழி கேட்க
எனது மனமும் உம்மையே காட்ட – 2
எனது மனமும் உம்மையே நினைக்க – 2
எனது இதயம் உம்மில் அக்களிக்க

எனது இன்பம் பிறருக்கு நிறைவாய்
எனது வாழ்வும் பிறருக்கு ஒளியாய் – 2
எனது வாழ்வு பிறருக்கு வாழ்வாய் – 2
எனது சாவு பிறருக்கு வாழ்வாய்

**11ஆம் திருநிலை**
**இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்**

முதல்வர் :– திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் பண்ணுகிறோம்

மற்றவர் :– அது ஏனென்றால் உம்முடைய அர்ச்சிஷ்ட சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

**சிந்தனை....**

பரமண்டல மந்திரம், அருள்நிறை மந்திரம்,திரித்துவ ஸ்தோத்திரம்

முதல்வர் :– எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி

மற்றவர் :– எங்கள் பேரில் தயவாயிரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும்:– மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள்
சர்வேசுரனுடைய இரக்கத்தினால்
சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.

**பன்னிரெண்டாம் திருநிலையை நோக்கி.....**

**நீட்டிய கைகால்களில் நீண்ட இரும்பாணிகள்**
**நிஸ்டூரமாய் அறைய நேசத்தினாலே வெந்து பலியானீர்**

**என் இதயம் யாருக்கு தெரியும்...**

என் இதயம் யாருக்குத் தெரியும்
என் வேதனை யாருக்குப் புரியும்
என் தனிமை என் சோர்வுகள்
யார் என்னைத் தேற்றக் கூடும் – 2

நெஞ்சின் நோவுகள் அதை மிஞ்சும் பாரங்கள்
தஞ்சம் இன்றியே உள்ளம் ஏங்குதே – 2

சிறகு ஒடிந்த நிலையில் பறவை பறக்குமோ
வீசும் புயலிலே படகும் தப்புமோ – 2

அங்கே தெரியும் வெளிச்சம் கலங்கரை தீபமோ
இயேசு இராஜனின் முகத்தின் வெளிச்சமே – 2

என் இதயம் இயேசுவுக்குத் தெரியும்
என் வேதனை இயேவுக்குப் புரியும்
என் தனிமை என் சோர்வுகள் இயேசு தேற்றுவார

**ஆணி கொண்ட காயங்களை**

ஆணி கொண்ட காயங்களை
அன்புடன் முத்தி செய்கின்றேன்
பாவத்தால் உம்மைக் கொன்றேனே
ஆயனே என்னை மன்னியும் – 2

வலது கரத்தின் காயமே அழகு நிறைந்த இரத்தினமே
அன்புடன் முத்தி செய்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடது கரத்தின் காயமே இணையில்லாத எழில் மலரே
அன்புடன் முத்தி செய்கின்றேன்

வலது பாதக் காயமே பலன் மிகத்தரும் நற்கனியே
அன்புடன் முத்தி செய்கின்றேன்

இடது பாதக் காயமே திடம் மிகத் தரும் தேனமுதே
அன்புடன் முத்தி செய்கின்றேன்

திருவிலாவின் காயமே அருள் சொரிந்திடும் ஆலயமே
அன்புடன் முத்தி செய்கின்றேன்

**12ஆம் திருநிலை**
**இயேசு சிலுவையில் உயிர்விடுகிறார்**

முதல்வர் :– திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் பண்ணுகிறோம்

மற்றவர் :– அது ஏனென்றால் உம்முடைய அர்ச்சிஷ்ட சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

சிந்தனை....

பரமண்டல மந்திரம், அருள்நிறை மந்திரம்,திரித்துவ ஸ்தோத்திரம்

முதல்வர் :– எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி

மற்றவர் :– எங்கள் பேரில் தயவாயிரும்

**சிலுவையை நிமிர்ந்து பாராயோ**

சிலுவையை நிமிர்ந்து பாராயோ – அதன்
புதுமையை கொஞ்சம் கேளாயோ
உலகமே உலகமே உலகமே உலகமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவியை மன்னிக்கும் சிலுவையிது – புது
ஆவியைத் தந்திடும் சிலுவையிது
துன்பத்தை போக்கிடும் சிலுவையிது – மனத்
துயரத்தை நீக்கிடும் சிலுவையிது – 4

குறைகளை அகற்றிடும் சிலுவையிது – பல
நிறைகளை அளித்திடும் சிலுவையிது
மரணத்தை வென்ற சிலுவையிது – பலர்
மானத்தை காத்த சிலுவையிது – 4

அன்பினை வளர்க்கும் சிலுவையிது – உன்
பண்பினை உயர்த்திடும் சிலுவையிது
உண்மைக்கு சான்றாம் சிலுவையிது – பல
தின்மைக்கு மருந்தாம் சிலுவையிது – 4

**கல்வாரியில் அன்னை மரியைக் கண்டேன்**

கல்வாரியில் அன்னை மரியைக் கண்டேன்
கண்ணீர் சொறியும் தாய் நிலையைக் கண்டேன்

பொன்னான மேனி புண்ணாக நொந்து
புழுவாகத் துடிக்கும் ஓர் உருவம் கண்டேன்
அம்மா என்றழைக்கப் பிள்ளை இல்லாமல்
ஓடாகத் தேயும் தாய் நிலையைக் கண்டேன்

பூவான உள்ளம் போராடும் நெஞ்சம்
பேசாமல் தனியாக வாடக் கண்டேன்
மயிலான வண்ணம் சேறாக மாறி
ஆறாக கன்னத்தில் ஓடக் கண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகைப்பாடல்

**இறைவனின் திருமுன் வாருங்கள்**

இறைவனின் திருமுன் வாருங்கள்
இன்னிசை பாடி வாழ்த்துங்கள்
நன்றிகள் நிறைந்த மனதுடனே
அவரின் நாமத்தைப் போற்றுங்கள்

வாருங்கள் புகழ்ந்து போற்றுங்கள்
நம்மை வாழ்விக்கும் தேவனை

ஆலய மணிகளின் ஓசைதனில்
ஆண்டவர் அழைக்கிறார் வாருங்கள்
வாழ்வு தரும் வார்த்தையினால்
வளமிக்க செய்வார் வாருங்கள் (வாருங்கள்...)

துன்பம் துயரம் தொல்லைகளை
துடைத்திட செய்வார் தூயரவர்
பகைமை பயம் மற்றும் பாவம் தனில்
விடுதலை அளிப்பார் வேந்தனவர் (வாருங்கள்...)

முதல் வாசகம்

விடுதலைப் பயணம் நூலிலிருந்து வாசகம் 20:1 – 17

பதிலுரைப் பாடல்
திருப்பாடல் : 19:7,8,9,10

பல்லவி: ஆண்டவரே, நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடமே உள்ளன.

**இரண்டாவது வாசகம்**

தூய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 1:22 – 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்செய்திக்கு முன் வசனம்

"தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்"

மகிமையும் புகழும் இறைவனே உமக்கே...

நற்செய்தி வாசகம்

பரிசுத்த யோவான் 2:13 – 25

காணிக்கைப் பாடல்

தினம் தினத் தன்னையே தந்திடும்

தினம் தினத் தன்னையே தந்திடும்
என் உயிரான இயேசுவே தினம்
தினம் நினைத்துன்னை வாழும்
நல்ல இதயம் நாங்கள் தருகின்றோம்
ஏற்றருளும் ஆண்டவரே
மாற்றிவிடும் உம் பலிப்பொருளாய் – 2

படைத்தாய் அழகு உலகம் – புது
படைப்பாய் மாறச் செய்தாய்
கொடுத்தாய் உன்னை முழுவதும்
உலகம் மீட்பு அடைய
அழைத்தாய் எம்மை தினமும்
உன் கருத்தினால் இணைந்து
எம்மையே இழந்து உவப்புடன்
தருகின்றோம் கனிவுடன் ஏற்றிடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையாய் நீயும் வந்து – இந்த
உலகை மலரச் செய்தாய்
உடைத்தாய் உந்தன் உடலை
மனிதன் முழுமை அடைய
பணித்தாய் எம்மை தினமும
எம் சுயநலன் களைந்து
எம்மையே மறந்துஉமக்கெனத்
தருகின்றோம் கனிவுடன் ஏற்றிடுவாய்

## திருவிருந்துப் பாடல்

**தேவா உன் திருவடியை**

தேவா உன் திருவடியைஎன்றென்றும் நான் தேடுவேன்
நாதா உன் சந்நிதியைதினம் தோரும் நான் நாடுவேன் – 2

சுகமான நினைவாலே சுரமான சொல்லாலே
நிதம் உந்தன் பதம் தேடுவேன்
உன் அருளாலே உயிர் வாழ்வேன்.

இருளான உலகத்திலே நீ ஒளியாக வரவேண்டும்
தடுமாறி தவறாக நான் வாழும்போது
வழிகாட்டி எனைக் காக்க வா
எனக்காக உயிர் வாழ்பவா
ஒளியாக வழியாக உயிராக வந்து
எனக்காக உயிர் நீத்தவா கல்வாரி பலியானவா

நிலையில்ல உலகத்திலே நீ நிலைவாழ்வு தரவேண்டுமே
பொய்யான சுகம்தேடி நான் வாழும் போது
மெய் ஞானம் சுடரானவா இருள் நீக்கி அருளானவா
உயிராக உறவாக நிறை வாழ்வு தந்து
இறையாக எனை ஆள்பவா என் இயேசு மனுவானவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாறாத தெய்வம்

மாறாத தெய்வம் (2) நீ மட்டும்
நிலையில்லா உலகு நிஜமில்லா உறவு
நிலையானதொன்றும் இங்கில்லை
நேற்றும் இன்றும் என்றும்
மாறாத தெய்வம் நீ மட்டும் போதும் எப்போதும்
நீ மட்டும் போதும் (3) – எப்போதும்

ஆசையிலே பிறந்து ஆணவத்தில் தொடர்ந்து
ஆடியிங்கு அடங்குது வாழ்க்கை
வாழ்வு தரும் வார்த்தை வாழ்க்கை தனை வளர்த்தால்
வசந்தம் வந்து நம்மில் என்றும் தங்கும்
நீ மட்டும் போதும் என் வாழ்வு மாறும் – (2)
நீ மட்டும் போதும் எப்போதும்

பொய்மையிலே விழுந்து போலியாக நடந்து
பொழுதிங்கு போகுது கழிந்து
உண்மைதனை உணர்ந்து உறுதியுடன் எழுந்தால்
ஊதியங்கள் தேவையில்லை நமக்கு
நீ மட்டும் போதும் என் வாழ்வு மாறும் – (2)
நீ மட்டும் போதும் எப்போதும்

## குடும்ப ஆண்டுக்கான ஜெபம்

எல்லாம் வல்ல இறைவா, உமது முழுமையான தூய அன்பினால் இவ்வுலகில் மனிதனாக எம்மைப் படைத்ததற்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். மனிதனை ஆணும் பெண்ணுமாக படைத்து ஒரு அருள் அடையாளத்தின் உடன்படிக்கை வாழ்வுக்கு அழைத்து தொடர்ந்து தூய்மையில் வாழ அழைத்துள்ளீர். இவ்வாண்டில் எம்மை இந்த புனிதமான அழைப்புக்கு அர்ப்பணிக்கின்றோம். எம்மை ஆசீர்வதியும். உமது அன்பை சுவைக்கவும். பிறருடன் பகிர்ந்து வாழவும் எமக்கு உதவியருளும்.

கணவனும் மனைவியும் தங்கள் திருமணம் என்னும் உடன்படிக்கை அருள்வாழ்வில் ஒருவரையொருவர் முழுமையாக அன்பு செய்ய வரந்தாரும். தங்கள் வாழ்வின் மூலம் இறையருளின் விழுமியங்களை தங்கள் பிள்ளைகளுக்கு வழங்கும் பெற்றோராக்கியருளும். திருச்சபையின் படிப்பினைகளுக்கு ஏற்ப இன்ப துன்பங்களை ஏற்று வாழ வழிகாட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வருடத்தில் எம் குடும்பங்களையும் பிள்ளைகளையும் உமக்கு அர்ப்பணம் செய்கின்றோம். பல்வேறு மாற்றங்கள் நிறைந்த இவ்வுலகிலே தீய நாட்டங்களில் இருந்து எம் குடும்பங்களைப் பாதுகாத்தருளும். நாங்கள் முழு சக்தியையும் வழங்கி நன்நெறியில் வாழும் இறை மக்களாக வாழும் வரத்தை அளித்தருளும். நாங்கள் எங்கள் தாய் நாட்டை கட்டியெழுப்புவதற்கு வேண்டிய விசுவாசத்தை தந்தருளும். மரியன்னையிடம் காணப்பட்ட பண்புகளை தியானிப்பதோடு நாசரேத்தில் வாழ்ந்த திருக்குடும்பம் போல் வாழ வழிகாட்டியருளும்.

எம் குடும்பங்களை உமது வல்லமை நிறைந்த இறைவார்த்தையினாலும் குடும்பமாக செபிக்கும் செயல்களினாலும் சக்திப்படுத்தியருளும் எம் எடுத்துக்காட்டான வாழ்வினால் திருச்சபையின் வளர்ச்சிக்கு தேவ அழைத்தலை உருவாக்கும் குடும்பங்களாக வாழ வழிகாட்டியருளும். ஆமென்.

நன்றிப் பாடல்

**அம்மா அம்மா மரியே**

அம்மா அம்மா மரியேதூய ஆவியின் ஓவியம் நீயே
அருளே நிறைந்த தாயே – 2
எங்கள் அனைவருக்கும் நீ அடைக்கல மாதாவே
வாழ்க மரியே வாழ்க தாயே

இறைவனின் ஆவி உம்மீது வர
உன்னத வல்லமை நிழலிட
இறைமகன் இயேசுவை குழந்தையென – 2
உந்தன் உதரத்தில் சுமந்த கன்னி தாயே
வாழ்க மரியே வாழ்க தாயே – 2

ஆவியின் வருகைக்குக் காத்திருந்த
சீடர்கள் குழுவினில் ஒருங்கிணைந்து
இறைவனைப் புகழ்ந்து ஜெபித்திருந்து
வாழ்க மரியே வாழ்க தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்கருணை ஆராதனை
## எழுந்தேற்றப் பாடல்

**அன்பின் தேவ நற்கருணையிலே**

அன்பின் தேவ நற்கருணையிலே
அழியாப் புகழோடு வாழ்பவரே – அன்புப்
பாதையில் வழி நடந்தே
அடியோர் வாழ்ந்திட துணை செய்வீர்

அற்புதமாக எமைப் படைத்தீர் தற்பரன் நீரே
எமைமீட்டடீர் பொற்புடன் அப்ப இரசகுணத்தில்
எப்பொழுதும் வாழ் இறைவனானீர்
எத்தனை வழிகளில் உமதன்பை
எண்பித்தெமை நீர் ஆட் கொண்டீர்

கல்வாரி மலையின் சிகரமதில்
கனிவுடன் தினம் எமை நிலைநிறுத்தும்
நற்கருணை விசுவாசமதில் நம்பிக்கையூட்டி வளர்த்திடுவீர்
இளமையின் பொலிவால் திகழ் திருச்சபையும்
யாவரும் வாழத் தயை புரிவீர்

ஞானம் மிகுந்த ஈழமதில் நல்லொளி
பாய்ச்சும் இறைவனே நீர்
ஞாலமெல்லாம் இருள் நீங்கிடவே
நாடுகள் வீடுகள் எங்கணுமே
நலம் பல பொழிவீர் நம்தேவா
நற்கருணை வாழ் நாயகனே

**தூபம் போல் என் ஜெபங்கள்...**

தூபம் போல் என் ஜெபங்கள்
ஏற்றுக்கொள்ளும் ஐயா
மாலை பலிபோல் என் கைகளை
உயர்த்தினேன் ஐயா

உம்மை நோக்கி கதறுகிறேன்
விரைவாய் உதவி செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் குற்றங்களை நீ மனதில் கொண்டால்
நிலை நிற்க முடியாதையா
மன்னிப்புத் தருபவரே
உம்மைத் தானே தேடுகிறேன்
விடியலுக்காய் காத்திருக்கும் காவலனைப் பார்க்கிலும்
என் நெஞ்சம் ஆவலுடன் உமக்காய் ஏங்குதையா

என் வாய்க்கு காவல் வையும் காத்துக்கொள்ளுமையா
தீயன எதையுமே நான் நாட விடாதேயும்

**வழியைக் கர்த்தருக்குக் கொடுத்து**

வழியைக் கர்த்தருக்குக் கொடுத்து விடு
அவரையே நம்பியிரு – உன்
காரியத்தை வாய்க்கச் செய்வார்
உன் சார்பில் செயலாற்றுவார்

காத்திரு பொறுத்திரு கர்த்தரையே நம்பியிரு
காரியத்தை வாய்க்கச் செய்வார்
உன் சார்பில் செயலாற்றுவார

தீயவன் செயல் குறித்து மனம் பதறாதே
புல்லைப் போல் உலர்ந்து
பூவைப் போல உதிர்ந்து
இல்லாமல் போய் விடும் – காத்திரு

மகிழ்ந்து களி கூரு தொடர்ந்து துதிபாடு
உன் இதயத்தின் வாஞ்சை
விருப்பங்கள் எல்லாம் விரைவில் நிறைவேற்றுவார்

நீதிமான் அனைவருக்கும்
வெற்றி உண்டு வெகு விரைவில்
துணை நின்று கர்த்தரோ நடத்திச் செல்வார
துரிதமாய் ஜெயம் தருவார்

உனது நேர்மையெல்லாம்அதிகாலை வெளிச்சமாகும்
நண்பகல் போலாகும்உன் நீதி நியாயம் நண்பா கலங்காதே

கோபத்தை விட்டு விடுசினம் நீ கொள்ளாதே
பொறாமை எரிச்சல் ஒரு போதும் வேண்டாம்
அது தீமைக்கு வழி நடத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடும் என் கண்களையே

தொடும் என் கண்களையே
உம்மை நான் காணவேண்டுமே
இயேசுவே உம்மையே நான் காணவேண்டுமே

தொடும் என் காதுகளை
உம் குரல் கேட்கவேண்டுமே
இயேசுவே உம் குரலை கேட்கவேண்டுமே

தொடும் என் மனதினையே
மனப் புண்கள் ஆற வேண்டுமே
இயேசுவே மனப் புண்கள் ஆறவேண்டுமே

தொடும் என் உடலினையே
உடல் நோய்கள் தீர வேண்டுமே
இயேசுவே உடல் நோய்கள் தீர வேண்டுமே

தொடும் என் ஆன்மாவையே
என் பாவம் போக்க வேண்டுமே
இயேசுவே என் பாவம் போக்க வேண்டுமே

தொடும் என் இதயத்தையே
உம் அன்பு பெருக வேண்டுமே
இயேசுவே உம் அன்பு பெருக வேண்டுமே

## என் பிழையெல்லாம் பொருத்தருள்வாய்

என் பிழையெல்லாம் பொருத்தருள்வாய்
செந்நீர் வியர்வை சொரிந்தவனே – 3

புண்படக் கசையால் துடித்தவனே – 3
முள்முடி சூடிய மன்னவனே – 3
துன்பச் சிலுவை சுமந்தவனே – 3
தன்னுயிர்த் தியாகம் புரிந்தவனே – 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாண்புயர் இவ்வருள் அனுமானத்தை...**

மாண்புயர் இவ்வருள் அனுமானத்தை
தாழ்ந்து பணிந்து ஆராதிப்போம்
பழைய நியம முறைகள் அனைத்தும்
இனி மறைந்து முடிவு பெறுக
புதிய நியம முறைகள் வருக
புலன்களாலே மனிதன் இதனை
அறிய இயலாக் குறையை நீக்க
விசுவாசத்தின் உதவி பெறுக

பிதா அவர்க்கும் சுதன் அவர்க்கும்
புகழ்ச்சியோடு வெற்றி ஆர்ப்பும்
மீட்பின் பெருமை மகிமையோடு
வலிமை வாழ்த்து யாவும் ஆக
இருவரிடமாய் வருகின்றவராம்
தூய ஆவியானவர்க்கும்
அளவில்லாத சமபுகழ்ச்சி
என்றுமே உண்டாக. ஆமென்

குரு: பரலோக அப்பத்தை அவர்களுக்கு கொடுத்தருளினீர்.
மக்: அதில் சகல மதுர இன்பமும் உண்டாகியிருந்தது.

செபிப்போமாக!
இறைவா! இந்த வியப்புக்குரிய திருவருட்சாதனத்திலே
உம்முடைய திருப்பாடுகளின் நினைவை எங்களுக்கு
விட்டுச்சென்றீர். உமது திரு உடல் திரு இரத்தம் இவற்றின்
மறைபொருளை வணங்கும் நாங்கள் உம் மீட்பின் பலனை
இடைவிடாமல் அனுபவிக்க அருள்புரியுமாறு உம்மை
மன்றாடுகின்றோம். என்றென்றும் வாழ்ந்து ஆட்சி
செய்கின்றவர் நீரே
எல்: ஆமென்

**தேவ ஸ்துதிகள்**

அருட்திரு தேவ தேவன் போற்றி
அவர் தம் தூய நாமம் போற்றி

அவர் மகன் இயேசு கிறிஸ்து போற்றி
அவர் தம் தூய நாமம் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தம் தூய இதயம் போற்றி
அவர் தம் விலையிலா குருதி போற்றி

தேவ நற்கருணையில் இயேசு போற்றி
தேற்றிடும் தூய ஆவி போற்றி

தேவனின் அன்னை கன்னிமரி போற்றி
அவளது மாசில்லா உற்பவம் போற்றி

அவளது மாண்புறு விண்ணேற்பு போற்றி
அவளது புனித நாமம் போற்றி

அவளது திரு துணைவர் சூசை போற்றி
தூதரில் புனிதர் தேவன் போற்றி

## நன்றிப் பாடல்

### இதயம் நன்றியுடன் நிரம்பி துதித்திடுவோம்

இதயம் நன்றியுடன் நிரம்பி துதித்திடுவோம்
மகிபன் இயேசுவையே தினமே துதித்திடுவோம்

தேவ ராஜ்யம் தேடி வந்தால் தேவ நன்மை தங்கிடும்
துதி செய்தால் தடை நீங்கும் தேவ ஆசி தங்கிடும்
(இதயம்...)

ஆவி ஆத்மா உடல் யாவும் பரிசுத்தம் காக்குமே
பரன் பாதம் போற்றி வாழ்த்தி எந்த நாளும் பணிகுவோம்
(இதயம்...)

சென்ற நாளில் நன்மை செய்த மன்னன் இயேசு தேவனை
பாது காத்தார் துணை நின்றார் நன்றியோடு பாடுவோம்
(இதயம்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பனிமய மாதா சங்கம்

## புனித பிலிப்நேரிஸ் தேவாலயம்

## புறக்கோட்டை கொழும்பு—11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org